**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.157/2025</u>**

**<u>நாள் : 27.03.2026</u>**

**ம.சா.** 2 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)-ம் ஆண்டின் 54 வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கைலாசம் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு. சாமிநாதன் | வயது | : | 55 |
| ஊர் | : | மல்லகுண்டா | தொழில் | : | விவசாயம் |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 2வது சாட்சி ஆவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**<u>2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்த புஷ்பராஜ் எனது உறவினர் அல்ல. என்னை சாட்சியமளிக்க விபத்தில் இறந்தவரின் மாமாவும் அம்மாவும் அழைத்ததன்பேரில் வந்தேன். விபத்தில் நடந்த தகரகுப்பம் உயர்நிலைப்பள்ளி அருகில் நானும், மணி, பிரகாஷ் ஆகியோர் நின்று பேசிகொண்டிருந்தோம். அப்போது புஷ்பராஜ் அவரது அம்மாவை இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார வைத்துகொண்டு வந்தார். நான் விபத்தை நேரில் பார்த்த நிலையில் 108 ஆம்புலன்சுக்கு போன்

செய்து சொன்னேன். அதனை அறிந்த வகையில் விபத்தில் இறந்தவரின் உறவினர்கள் என்னை சாட்சியமளிக்க அழைத்தார்கள். நான் விபத்தை நேரில் பார்த்ததை இறந்தவரின் குடும்பத்துக்கு யார் சொன்னார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இரண்டு இருசக்கர வாகனங்களும் ஒன்றுக்கொன்று நேருக்கு நேர் மோதியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரில் வந்த இருசக்கர வாகனமானது தவறான பாதையில் வந்து மோதியதாக சாட்சி தானாக கூறுகிறார். விபத்தானது தகரகுப்பம், உயர்நிலைப்பள்ளி எதிரில் நடந்தது. மேற்படி விபத்து நடந்த சாலையானது ஒருவழிச்சாலையாகும், அங்கு தடுப்பு எதுவும் இல்லை. நான் எதனடிப்படையில் தவறான பாதையில் வந்ததாக சொல்கிறேன் என்றால் அந்த வளைவான பாதையில் அவர் இடதுபுறம் வருவதற்கு பதிலாக வலதுபுறம் வந்ததால் தவறான பாதை என்று குறிப்பிட்டேன். விபத்தானது சாலையின் நடுவில் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.